## முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
## முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி.
## HMOP.No.50/2024

பெயர் : சுஜிதா

த/பெ. : ராமதாஸ்

தேதி : 02.02.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை:-**

எதிர்மனுதாரரும், நானும் விருப்பப்படி தான் திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு எனது பெற்றோருக்கு சம்மதம் கிடையாது என்றால் திருமணத்தின்போது சம்மதம் கிடையாது பின்னர் சம்மதித்தார்கள். திருமணத்தின்போது எனக்கு பரிசாக கொடுத்த பரிசு பொருட்கள் மற்றும் சீர்வரிசை பொருட்களின் பட்டியல் உள்ளதா என்றால் இல்லை. எனது பிரசவத்தின்போது எனது கணவர் தான் எனக்குரிய மருத்துவ செலவு முழுவதும் செய்தார் என்றால் இல்லை. எனது அப்பாதான் செலவு செய்தார். எதிர்மனுதாரர் மாதம் சம்பளமாக ரூ.75,000/- பெற்று வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் அதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எனது பெயரில் அஞ்சல் துறையில் PLI மாதம் ரூ.8,000/- 2 வருடமாக கட்டி வருகிறார் என்றால் இல்லை 1 வருடமாக கட்டி வந்தார். நாங்கள் திருமண தம்பதிகள் என்றாலும் மூன்றாம் நபர் கைப்பேசியில் பேசியதை நான் பதிவுசெய்தது தவறு என்று சொன்னால் அவர் என்னை துன்புறுத்தியதால் என்னுடைய பாதுகாப்பிற்காக நான் பதிவுசெய்து வைத்துக்கொண்டேன்.

எதிர்மனுதாரர் என்னை வரதட்சனை கொடுமை படுத்தினார் என்று கூறியுள்ளதற்கு காவல் துறையில் ஏதேனும் புகார் கொடுத்தீர்களா என்றால் குடும்ப பிரச்சனை என்பதால் புகார் கொடுக்க வில்லை. எதிர்மனுதாரர் என்னை அடித்து துன்புறுத்தினார் என்பதற்கு நான் மருத்துமவனையில் சிகிச்சைஅளித்ததற்காக ஏதேனும் மருத்துவ சீட்டுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் வீட்டிலிருந்து நானும் எனது குழந்தையும் இரயிலில் தான் வந்தோம் என்றால் சரிதான். எங்களை எதிர்மனுதாரர் தான் இரயிலில் அழைத்து வந்து எங்களை

வீட்டில் விட்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் கைபேசியை நான் Track செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரர் மீது எப்போதும் சந்தேகத்தின் பேரில் இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. சமரச தீர்வு மையத்தில் நீதிமன்றத்தில் சமரசம் பேசும்போது எனது சகோதரர் எதிர்மனுதாரரை நீதிமன்றத்திலேயே அடித்தார் என்று சொன்னால் எதிர்மனுதாரர் எங்கள் குடும்பத்தினரை தகாத வார்த்தை கொண்டு பேசியதால் எனது சகோதரர் ஆத்திரம் கொண்டு எதிர்மனுதாரரின் சட்டையை மட்டும் தான் பிடித்தார். அடிக்கவில்லை. எதிர்மனுதாரர் தனது மகனை பார்க்க வந்தபோது நீங்கள் வீட்டின் கேட்டை பூட்டிவைத்தீர்கள். பார்க்க விடவில்லையே ஏன் என்றால் அவர் ஆத்திரமாக கேட்டினை தட்டியதால் எனது மகன் பயந்ததால் கேட்டினை பூட்டினேன். எதிர்மனுதாரர் எனக்கு 56 கிராமில் நகை செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்றால் என்னால் இனி அவரோடு சேர்ந்து வாழ இயலாது. அவர் என்னை மனதலவிலும். உடலளவிலும் மிகவும் கொடுமை படுத்தியுள்ளார். எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் இருக்கிறேன் என்றால் நான் எனது உயிருக்கு பயந்துகொண்டு விலகி இருக்கிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.